## முடிவுரைகள்

65. மக்களுடைய வாழ்க்கையின் மீது கடுமையான தாக்கங்களையெடுத்து வந்திருக்கும் அழிவுகரமான ஒரு பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்கொண்டு வருவதுடன், மனித உரிமைகளின் பிரித்து வேறுபடுத்த முடியாத இயல்பினை அது வலியுறுத்தியுள்ளது. இலங்கையின் மீட்சியில் அதற்கு ஆதரவளிக்க வேண்டுமென உயர் ஆணையாளர் சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறார். எவ்வாறிருப்பினும், நிலையான முன்னேற்றத்தை நாடு தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் இந்த நெருக்கடிக்கு பங்களிப்புச் செய்த அடிச்சரடாக இருந்து வரும் காரணிகளைக் கவனத்திலெடுத்து, அங்கீகரித்து, இலங்கைக்கு உதவுவது முக்கியமானதாகும். இக்காரணிகள் கடந்த கால மற்றும் தற்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வேரூன்றியிருக்கும் தண்டனை விலக்குரிமை, பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் ஊழல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. ஜனநாயக கண்காணிப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றை பலப்படுத்துவதற்கும், நிறுவனங்களின் சுயாதீனத்தை மீளெடுத்து வருவதற்குமென இலங்கை விரிவான கட்டமைப்பு ரீதியான, அரசியல் யாப்பு ரீதியான சீர்திருத்தங்களையும், அரசியல் சீர்திருத்தங்களையும் மேற்கொண்டால் சர்வதேச சமூகத்திலிருந்து கிடைக்கும் ஆதரவு அர்த்தபூர்வமானதாகவும், அந்நாட்டின் மீது நிலையான ஒரு தாக்கத்தை எடுத்து வரக்கூடியதாகவும் இருந்து வர முடியும்.

66. அனைத்துச் சமூகங்களைச் சேர்ந்த இலங்கையர்களும் பொறுப்புக் கூறல் மற்றும் ஜனநாயகச் சீர்திருத்தங்கள் என்பன தொடர்பான பரவலான கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்கள். அது எதிர்காலத்துக்கான புதிய, பொது நோக்கொன்றுக்கான முக்கியமான ஒரு துவக்கப் புள்ளியை வழங்குகின்றது. பொறுப்புக் கூறல், சட்டத்தின் ஆட்சி, பாரபட்சம் காட்டாமை மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அனைவரையும் உள்ளடக்கிய, பன்மைத்துவ மற்றும் முழுமையான ஜனநாயக அரசொன்றாக இலங்கை எவ்வாறு நிலைமாற்றமடைய முடியும் என்பது குறித்த ஒரு புதிய, அர்த்தபூர்வமான தேசிய உரையாடலை முன்னெடுப்பதற்கான ஒரு வாய்ப்பு இப்பொழுது இருந்து வருவதாக உயர் ஆணையாளர் நம்புகின்றார். கருத்துச் சுதந்திரம், அமைதியாக ஒன்று கூடும் சுதந்திரம் மற்றும் ஜனநாயகப் பங்கேற்பு என்பவற்றுக்கான ஒரு சூழலை உறுதிப்படுத்துவது அத்தியாவசியமானதாகும். நீண்ட காலமாக பாரபட்சத்தை நிலைக்கச் செய்து, மனித உரிமைகளை உதாசீனம் செய்திருக்கும் பரவலான அரசியல் மற்றும் கட்டமைப்பு ரீதியான மூல காரணங்களைக் கவனத்தில் எடுப்பதற்கென அரசாங்கம் எதிர்ப்பு இயக்கங்களுடன் பரந்த அடிப்படையிலான, பங்கேற்பு செயன்முறை ஒன்றுக்கூடாக நேர்மறையான விதத்தில் தொடர்புகளையேற்படுத்திக் கொள்ள வேண்டுமென உயர் ஆணையாளர் ஊக்குவிக்கின்றார்.

67. சட்டத்தின் ஆட்சி, நல்லிணக்கம், இலங்கையின் நிலைத்து நிற்கக் கூடிய சமாதானம் மற்றும் அபிவிருத்தி என்பன எதிர்கொண்டு வரும் முக்கியமான இடையூறாக தண்டனை விலக்குரிமை இருந்து வருவதுடன், மீணடும் மீண்டும் அத்துமீறல்கள் இடம்பெறுவதற்கான ஒரு அடிப்படையான அபாய காரணியாகவும் அது உள்ளது. போர் முடிவடைந்து 13 வருடங்கள் கடந்திருக்கும் நிலையிலும் கூட, கடந்த காலத்தில் மனித உரிமை மீறல்கள் மூலம் பாதிக்கப்பட்டிருந்தவர்கள் உண்மை மற்றும் நீதி என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக இன்னமும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை இழைத்திருக்கும் நபர்களை அவற்றுக்குப் பொறுப்புக் கூற வைப்பதற்கும், உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகள் என்பவற்றுக்கான பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் வினைத்திறன் மிக்க நிலைமாறு கால நீதிச் செயன்முறை ஒன்றை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் விடயத்தில் ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களுக்கு ஊடாக இலங்கை அரசு தொடர்ந்தும் தோல்வி கண்டு வந்துள்ளது. அதற்குப் பதிலாக, அந்த அரசாங்கங்கள் பொறுப்புக்கூறல் தொடர்பாக அரசியல் இடையூறுகளை உருவாக்கியிருப்பதுடன், போர் குற்றங்களில் ஈடுபட்டிருந்ததாக நம்பகமான விதத்தில் குற்றஞ்சாட்டப்படும் ஒரு சில இராணுவ அதிகாரிகளை முனைப்பாக முன்னிலைப்படுத்தி, அரசின் உயர் பதவிகளுக்குள் உள்வாங்கியுள்ளன. இந்த தண்டனை

விலக்குரிமை மனித உரிமை மீறல்களை மேற்கொள்பவர்களுக்கு மேலும் தைரியமூட்டி இருப்பதுடன், ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் என்பவற்றுக்கான செழிப்பான ஒரு களத்தை உருவாக்கியுள்ளது. வினைத்திறன் மிக்க வடிகட்டும் செயன்முறை மற்றும் பாதுகாப்புத் துறை தொடர்பான அனைத்துமடங்கிய சீர்திருத்தங்கள் என்பன இல்லாத நிலையில் பாரதூரமான குற்றச்செயல்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் பொருளாதாரக் குற்றங்கள் என்பன மீண்டும் இடம்பெறக்கூடிய அபாயம் தோன்றுகின்றது. ஏனெனில், அத்தகைய செயல்களில் ஈடுபட்டிருந்ததாக நம்பகமான விதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் அரச பொறிமுறைகளும், அதன் ஒரு சில உறுப்பினர்களும் இன்னமும் அந்த இடங்களில் இருந்து வரும் நிலை காணப்படுகிறது.

68. எனவே, தற்போதைய சவால்களைக் கவனத்தில் எடுப்பதற்கும், கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறுவதனை தவிர்த்துக் கொள்வதற்கும் அடிப்படை மாற்றங்கள் தேவைப்படுகின்றன. இந்தப் பின்புலத்தில், புதிய அரசாங்கம் இராணுவமயமாக்கலை நோக்கிய நகர்வை உடனடியாக திசை திருப்பி, அமைதியான எதிர்ப்புச் செயற்பாடுகளை கொடூரமான பாதுகாப்புச் சட்டங்களைப் பிரயோகித்து ஒடுக்கும் வழக்கத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். மேலும், பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்களை எடுத்து வந்து, தண்டனை விலக்குரிமையை முடிவுக்கு கொண்டு வரும் விடயங்கள் தொடர்பான கடப்பாட்டினை புதுப்பிக்க வேண்டும். உண்மையான, அனைத்துமடங்கிய நிலைமாற்ற இயல்பிலான நிலைமாறு கால நீதிச் செயன்முறை ஒன்றுக்கு அது மீண்டும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இந்தச் செயன்முறை குறிப்பிட்ட தரநிர்ணயங்களையும், அமுல் செய்வதற்கான ஒரு கால அட்டவணையையும் கொண்டிருப்பதுடன், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகிய தரப்புக்களுடன் கலந்தாலோசனை செய்து, சர்வதேச பங்காளர்களின் ஆதரவுடன் அமுல் செய்யப்படுதல் வேண்டும். மேலும், அது அனைத்து இலங்கையர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் பரந்த அடிப்படையிலான கலந்தாலோசனை செயன்முறைகளுக்கு ஊடாக பெருமளவுக்கு அடிப்படை இயல்பிலான அரசியல் யாப்புச் சீர்திருத்தமொன்றை முன்னெடுத்தல் வேண்டும். ஜனநாயக கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளைப் பலப்படுத்துவதற்கும், அரசியல் அதிகாரப் பகிர்வுக்கும் இது அவசியமாகும். நல்லிணக்கம் மற்றும் குடித்தொகையின் அனைத்து உறுப்பினர்களும் மனித உரிமைகளை முழுமையாக அனுபவித்தல் என்பவற்றுக்கான ஓர் உள்ளார்ந்த தேவையாக அது இருந்து வருகிறது.

69. மனித உரிமைகள் பேரவை இலங்கையில் இடம்பெற்று வரும் மாற்றங்களை உன்னிப்பாக தொடர்ந்து கண்காணித்து வர வேண்டியிருப்பதுடன், இலங்கை மக்களுக்கு நீதியை உத்தரவாதப்படுத்தும் விதத்தில் தேசிய மட்டத்தில் குறிப்பிடத்தக்க பெறுபேறுகள் இல்லாதிருப்பின் மனித உரிமை மீறல்கள், ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை எடுத்து வருவதற்கென உறுப்பு அரசுகள் குறைநிரப்பு சர்வதேச உத்திகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வர வேண்டும். மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் இந்த முக்கியமான பயணத்தில் தொடர்ந்தும் இலங்கை மக்களுடன் கை கோர்த்து நிற்கும்.

## பரிந்துரைகள்

70. தனது முன்னைய அறிக்கைகளிலும்,[1] ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பொறிமுறைகளின் அறிக்கைகளிலும் முன்வைக்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளை உயர் ஆணையாளர் மீண்டும் வலியுறுத்துகிறார். தேவைப்படும் விதத்தில், இந்தப் பரிந்துரைகளை அமுல் செய்வதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் (OHCHR) ஆயத்தமாக உள்ளது. இந்த நிர்ணயகரமான தருணத்தில் அரசாங்கத்துக்கும், இலங்கை மக்களுக்கும் ஆதரவளிக்கும் பொருட்டு

[1] A/HRC/46/20, para 60; A/HRC/49/9, para 67.

இலங்கையில் செயற்படும் அதன் அலுவலகத்தை பலப்படுத்துவதற்கு ஊடாக வழங்கப்படும் தொழில்நுட்ப உதவியையும் இது உள்ளடக்குகிறது.

71. இலங்கை அதிகாரிகள் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டுமென மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் பரிந்துரை செய்கிறது:

**a)** பொருளாதார நெருக்கடியின் போது மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதற்குத் தேவையான அனைத்துப் படிமுறைகளையும் மேற்கொள்ளல்; பாரபட்சம் காட்டாமை மற்றும் மனித உரிமைகளின் பாதுகாப்பு என்பவற்றின் அடிப்படையில் பெருமளவுக்கு விளிம்பு நிலையில் இருந்து வரும் மக்கள் பிரிவினர் மற்றும் எளிதில் பாதிக்கப்படக் கூடிய நபர்கள் ஆகியோருக்கு உடனடி நிவாரணம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல்; மற்றும் நிதிப்படுத்தலை அதிகரிப்பதன் மூலமும், புதிதாகத் தோன்றும் தேவைகளை உள்ளடக்கும் விதத்தில் அவற்றை விரிவாக்குவதன் மூலமும் சமூகப் பாதுகாப்பைப் பலப்படுத்தல்;

**b)** இராணுவச் செலவினத்தை கணிசமான அளவில் குறைத்தல், ஊழலுக்கு எதிராக நிர்ணயகரமான விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சர்வதேச ஒத்துழைப்புக்கு ஊடாக சுகாதாரம், சமூக பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகிய துறைகளில் முதலீடுகளை அதிகரித்தல்; சர்வதேச நிதி உதவி நிகழ்ச்சித்திட்டம் மனித உரிமைகள் மீது எடுத்து வரக் கூடிய தாக்கங்களை மதிப்பிடுதல் மற்றும் அவற்றை ஆகக் குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதற்கென தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

**c)** நீதித்துறை, மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றையும் உள்ளடக்கிய முதன்மை நிறுவனங்களின் சுயாதீனத்தை உத்தரவாதப்படுத்தும் அரசியல் யாப்பு சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கென அனைத்து இலங்கையர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் பரந்த அடிப்படையிலான கலந்தாலோசனைச் செயன்முறை ஒன்றை முன்னெடுத்தல்; நல்லிணக்கத்தின் உள்ளார்ந்த ஒரு பாகமாக இருந்து வரும் அரசியல் அதிகாரப் பகிர்வை மேம்படுத்தல்;

**d)** நிலைமாறு கால நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன தொடர்பான அனைத்துமடங்கிய ஓர் உத்தியை தயாரித்தல்; நம்பகமான உண்மையைக் கண்டறியும் பொறிமுறை ஒன்றை ஸ்தாபித்தல் மற்றும் குறிப்பிட்ட நோக்கத்துக்கென நீதிமன்றம் ஒன்றினை ஸ்தாபித்தல் என்பன தொடர்பான படிமுறைகள் மேற்கொள்வதனையும் உள்ளடக்கிய விதத்தில் இதுவரையில் நிறைவேற்றி வைக்கப்படாத கடப்பாடுகளை அமுல் செய்வதற்கென கால அட்டவணையுடன் கூடிய ஒரு திட்டத்தை தயாரித்தல்; அதே போல, பாதுகாப்புத் துறை சீர்திருத்தம் மற்றும் வடிகட்டல் என்பவற்றுக்கான ஒரு திட்டத்தை தயாரித்தல்; மேலும், அவை தமது முழுமையான பணிப்பாணையை சுயாதீனமாகவும், வினைத்திறன் மிக்க விதத்திலும் நிறைவேற்றி வைப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு காணாமற் போன ஆட்கள் அலுவலகம் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான அலுவலகம் என்பவற்றுக்கு மீண்டும் வலுவூட்டுதல்;

**e)** மனித உரிமை மீறல்கள் தொடர்பான குறியீட்டுச் சம்பவங்கள் குறித்து புலன் விசாரணைகளை முன்னெடுத்து, வழக்குத் தொடுத்தல்; உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த முன்னைய விசாரணைகளின் முழுமையான முடிவுகளை வெளியிடுதல் மற்றும் சர்வதேச உதவியுடனும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் முழுமையான பங்கேற்புடனும் மேற்கொண்டு நடவடிக்கைகளுக்கென சுயாதீனமான மற்றும் வெளிப்படையான புலன் விசாரணை ஒன்றை ஆரம்பித்தல்;

**f)** சிவில் விவகாரங்களில் இராணுவத்தின் செல்வாக்கை முடிவுக்கு கொண்டு வருவதற்கென படிமுறைகளை மேற்கொள்ளல் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல்;

**g)** இராணுவம் கையகப்படுத்தியிருக்கும் அனைத்து தனியார் காணிகளையும் திருப்பியளித்தல் மற்றும் சமய அமைவிடங்களை நிர்மாணித்தல் தொடர்பாக சர்வசமய உரையாடலுக்கு ஊடாக மேற்கொள்ளும் நடவடிக்கையையும் உள்ளடக்கிய விதத்தில் காணித் தகராறுகள் தொடர்பாக பாரபட்சமற்ற விதத்தில் தீர்வுகளை வழங்குதல்.

**h)** பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான புதிய சட்டவாக்கம் மற்றும் டிஜிட்டல் பாதுகாப்புத் தொடர்பான உத்தேச சட்டம் என்பன இலங்கையின் சர்வதேச சட்டக் கடப்பாடுகளுக்கு முழுமையாக இணங்கி ஒழுகுவதை உத்தவாதப்படுத்துதல்; பயங்கரவாத தடைச் சட்டத்தின் பாவனை குறித்த மிகவும் கண்டிப்பான ஒரு இடைக்கால முடக்கத்தை அனுசரித்தல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருப்பவர்கள் மற்றும் நீண்ட காலமாக சிறைக் கைதிகளாக இருந்து வருபவர்கள் ஆகியோரின் விடுதலையை துரிதப்படுத்துதல்;

**i)** அவசரகால ஒழுங்கு விதிகளின் தேவை மற்றும் விகிதாசார அளவிலான பாவனை என்பவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் சமூக ஊடகங்களை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பான உத்தேச ஒழுங்குவிதி அமைதியாக ஒன்று கூடும் சுதந்திரம், அமைப்புக்களில் இணைந்து கொள்ளும் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பவற்றை பாதுகாப்பதனை உத்தரவாதப்படுத்துதல்;

**j)** இலங்கையில் அதன் அலுவலகத்தை வலுப்படுத்துமாறும்,இலங்கை அதிகாரிகளுக்கும், சிவில் சமூகத்திற்கும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குமாறும், மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்துக்கு அழைப்பு விடுத்தல்;

72. மனித உரிமைகள் பேரவைக்கும், உறுப்பு அரசுகளுக்கும் 2021 ஆம் ஆண்டில் சமர்ப்பித்த தனது அறிக்கையின் 61 ஆவது பந்தியில் முன்வைத்திருக்கும் பரிந்துரைகளை உயர் ஆணையாளர் மீண்டும் வலியுறுத்துவதுடன், பேரவையும், உறுப்பு அரசுகளும் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்கிறார்:[2]

**a)** பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்பவற்றில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை தொடர்பாக அதன் உயரளவிலான கண்காணிப்பை மேற்கொண்டு, தொடர்ச்சியாகப் பேரவைக்கு அறிக்கையிட வேண்டுமென மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்திடம் **(OHCHR)** கேட்டுக் கொள்கிறது; மனித உரிமைகள் மீது தாக்கத்தையெடுத்து வந்திருக்கும் பொருளாதார குற்றங்களைக் கவனத்தில் எடுப்பதற்கான படிமுறைகளை முன்னெடுத்தல்;

**b)** பொருளாதார நெருக்கடியின் மனித உரிமைகள் பரிமாணங்கள் தொடர்பாக பரிசீலனை செய்து, பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தொனிப்பொருட்கள் தொடர்பான விசேட நடைமுறை பொறிமுறைகளை ஊக்குவித்தல்;

**c)** மனித உரிமை மீறல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் என்பன தொடர்பாக பணியாற்றுவதற்கென தீர்மானம் 46/ 1 இன் மூலம் மனித உரிமைகள் உயர்

---

[2] A/HRC/46/20.

ஆணையாளர் அலுவலகத்திற்கு (OHCHR) வழங்கப்பட்டிருக்கும் ஆற்றலை வலுப்படுத்துதல்;

d) இலங்கையின் அனைத்துத் தரப்புக்களினாலும் நிகழ்த்தப்பட்டிருக்கும் சர்வதேச குற்றச் செயல்களை நிகழ்த்தியிருக்கும் நபர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி, வழக்குத் தொடுப்பதற்கென தேசிய நியாயாதிக்கங்களில் வழக்கு நடைமுறைகளுக்கு ஊடாக ஒத்துழைப்பை வழங்குதல்; பிராந்தியத்திற்கு வெளியிலான அல்லது அகிலம் தழுவிய நியாயாதிக்கம் குறித்த ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளையும் உள்ளடக்கிய விதத்தில் சம்பந்தப்பட்ட சர்வதேச வலையமைப்புக்களுக்கு ஊடாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடைய பிரதிநிதிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இதனை மேற்கொள்ளல்;

e) பாரதூரமான சர்வதேச மனித உரிமை மீறல்கள் அல்லது மிக மோசமான மனித நேயச் சட்ட மீறல்கள் என்பவற்றை நிகழ்த்தியிருப்பதாக நம்பகமான விதத்தில் குற்றஞ்சாட்டப்படும் நபர்களுக்கு எதிராக சொத்துக்களை முடக்குதல் மற்றும் பயணத் தடைகள் போன்ற இலக்குடன் கூடிய தடைகளை விதிக்கும் விடயத்தை கவனத்தில் எடுத்தல்;

f) மனித உரிமைகள் மீது தாக்கத்தை எடுத்து வரும் பொருளாதார குற்றச்செயல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு இலங்கைக்கு ஆதரவளித்தல் மற்றும் திருடப்பட்ட சொத்துக்களை தேடி மீட்டெடுத்தல்.